**தென்னை பயிர்ச் செய்கை சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

தென்னை பயிர்ச் செய்கை சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரச் சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்துவிடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபை தொடர்ந்து செயற்படுத்துவதற்கான அதன் ஆற்றலினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிஇல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 24(அ) பந்தியின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தினால் பாதீடு செய்யப்பட்ட தரவுகளையும் உள்ளபடியான தரவுகளையும் தனித்தனியாக வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தரவுகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2022-12-31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தரவுகளுடன் ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுதுதுறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட தரவுகளுடன் உள்ளபடியான தரவுகளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 76(இ) பந்தியின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களில் முதிர்ச்சியடைகின்ற ரூபா 14,083,793 தொகையான நிலையான | அடுத்துவரும் ஆண்டின் போது குறுங்கால மற்றும் நிண்டகால நிலையான வைப்புக்களை முதிர்ச்சியடைகின்ற திகதிக்கு இணங்க வகைப்படுத்தி சரியாக கணக்கு வைப்பதற்கு | 06 மாதங்களில் முதிர்ச்சியடைகின்ற நிலையான வைப்புக்களை நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டுதல் |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் நீண்டகால முதலீடாகக் காட்டப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 09 ஆம் பந்திக்கு முரணாக தென்னை பயிர்ச் செய்கை சபையின் நிதி நிலைமை கூற்றில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 மாதங்களில் முதிர்ச்சியடைகின்ற ரூபா 79,826,734 மொத்த தொகையான குறுங்கால வைப்புக்களும் ரூபா 1,119,430,841 தொகையான சேமிப்புக் கணக்கின் மீதியும் காசும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டின் போது குறுங்கால மற்றும் நீண்டகால வைப்புக்களை முதிர்ச்சியடைகின்ற திகதிக்கு இணங்க வகைப்படுத்தி சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறுங்கால நிலையான வைப்புக்களை நிதி நிலைமைக் கூற்றில் காசும் காசுக்குச் சமனானவைகளின் கீழ் காட்டுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு முரணாக சபையின் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்ட இலாபத்திற்கு மேற்கொள்ளப்படுகின்ற செம்மையாக்கல்களில் தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 28,859,978 தொகையான முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2021-12-31 ஆந் திகதியில் முடியவடைந்த ஆண்டிற்கான தென்னை பயிர்ச் செய்கை சபையின் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கிய ஐந்தொகையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு நேரடியாக தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கும் அச்செம்மையாக்கல் பதிவுகள் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். | முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்கள் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றிலும் செம்மையாக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் போது செலுத்திய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 552,600 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 1,611,000 ஆக ரூபா 1,058,400 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021-12-31 ஆந் திகதியில் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டு கணக்கிற்கு செம்மையாக்கப்பட்ட ரூபா 1,058,400 தொகையான முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலானது இந்த ஆண்டில் செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணமாக பதியப்பட்டது. | முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்கள் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றிலும் செம்மையாக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது பணமாக கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 117,397,591 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 111,506,381 ஆக பதியப்பட்டிருந்ததனால் முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 5,891,210 ஆல் அதிகரித்திருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 117,397,591 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிச் சொத்துக்களுக்கான பிழைகளை சரிசெய்யும் மீதிகள் மற்றும் சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்குரிய மீதிகளின் ரூபா 5,891,209 மொத்த தொகையினை அக்கணக்குகளுக்கு செம்மையாக்கி இறுதி மீதி ரூபா 111,506,381 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் பதியப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் காசுக்கு கொள்வனவு செய்த சொத்துக்களின் சரியான பெறுமதியைக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காசுப் பாய்ச்சலுக்குரிய தொழிற்படு மூலதன செம்மையாக்கல்களை மேற்கொள்ளும் போது இருப்பு பெறுமதியிலுள்ள வித்தியாசம் ரூபா 503,251,200 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 502,090,934 ஆக ரூபா 1,160,266 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021-12-31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் தென்னங்கன்று, தென்னை சார்ந்த ஏனைய இரண்டு பெறுமதிகளுக்கிடையே செம்மையாக்கப்பட்ட மீதியானது காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கபாசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன செம்மையாக்கலின் இருப்பு மாற்றம் சரியாக பதியப்படுதல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற ஒரு சொத்தின் எச்சப் பெறுமதி மற்றும் பயன்பாட்டுக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் பூரணமாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 424,474,271 கிரயமான சொத்துக்கள் இன்னும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தும் அதற்கிணங்க ஏற்பட்ட மதிப்பீட்டுத் தவறினை நியம இலக்கம் 3 இன் பிரகாரம் செம்மையாக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தென்னை பயிர்ச்செய்கை சபையின் அனைத்து கட்டிடங்களும் மீள்மதிப்புச் செய்யப்படுவதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அச்செயற்பாடு முடிவடைந்த உடன் இந்த மீள்மதிப்புச் செய்யப்பட்ட பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுதுறை கணக்கீட:டு நியமத்தின் பிரகாரம் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் கிடைக்கின்ற அனைத்து வருமானங்களும் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்டிகாக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 734,294,000 தொகையான மூலதன மானியங்கள் நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 679,002,363 ஆக ரூபா 55,291,637 குறைத்து வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | 2021-12-31 அந் திகதியில் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு திறைசேரி நிதி ஏற்பாடாக ரூபா 734,294,000 கிடைத்திருந்தது. அப்பணத்தில் ரூபா 55,291,637 தொகை திறைசேரி நிதி ஏற்பாட்டின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வாதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மிகுதி ரூபா 679,002,363 ஆன அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கான பணம் வருமானமாகவும் ரூபா 55,291,637 தொகை மூலதன முதலீடாகவும் கணக்கீடு செய்யப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிட்ட முறைமையில் திறைசேரி மானியம் நிதிக்கூற்றுக்களில் காட்டுப்படுதல் வேண்டும். |
| (ஒ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் 02 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் சொத்துக்கள மற்றும் விளைச்சலை அறுவடை செய்யும் சந்தர்ப்பங்களில் கமத்தொழில் உற்பத்தி பொருட்கள் இந்த நியமத்தின் கீழ் உயிரியியல் சொத்துக்களாக இனங்காண முடியும் என்ற போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 365,711,768 தொகையான உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்களின் பெறுமதியினுள் அதனுடன் தொடர்பற்ற முழுமையாகச் செயற்பாடற்றுக் காணப்படும் உயிரியல் வாயு செயற்திட்டத்திற்குரிய ரூபா 300,374 கிரயம் மற்றும் பளை, காணி அபிவிருத்தி நிகழ்சிசித்திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 74,610,392 பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | உயிரியல் விஞ்ஞான ரீதியான பெறுமதியின் கீழ் காட்டப்பட்டுள்ள உயிரியல் வாயு செயற்திட்டம் தற்பொழுது முழுமையாக செற்பாடற்றுக் காணப்படுவதுடன் அது தொடர்பான ரூபா 300,374 பெறுமதிகள் அடுத்துவரும் ஆண்டின் போது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள பளை காணி அபிவிருத்திக் கிரயமான ரூபா 74,610,392.00 பெறுமதியானது 2022 நிதிக்கூற்றுக்களில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் பதிவிலிருந்து நீக்கி ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களுக்குரிய விடயங்கள் மாத்திரம் உயிரியல் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்தாக இனங்காணக்கூடியதான 12 மாத்திரி தோட்டங்களில் பலா, தேக்கு முதலிய 51 வகையான மரம் சார்ந்த பெறுமதியுடன் 8,916 மரங்களும் 39 நாற்று மேடைகளில் 64 வகையான மரப் பெறுமதியுடனான 6,577 மரங்களுமாக மொத்தமாக 15,493 மரங்களும் 12 மாதிரி தென்னை தோட்டங்களில் 128,601 தென்னை மரங்கள் மற்றும் 39 நாற்று மேடைகளின் 8,473 தென்னை மரங்களாக மொத்தமாக 137,074 தென்னை மரங்கள் பௌதீக மீளாய்வில் இனங்காணப்பட்டிருந்தும் அம்மரங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தென்னை பயிர்ச் செய்கை சபையின் மாதிரி தென்னை தோட்டங்களில் உயிரியல் விஞ்ஞான சொத்தாக இனங்காணப்பட்டுள்ள மரநீதியான பெறுமதியுள்ள அனைத்து மர வகைகளின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக தற்பொழுது தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் அந்த மரம் சார்ந்த பெறுமதியுடன் அனைத்து மரவகைகளினதும் மதிப்பீட்டுப் பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உயிரியல் விஞ்ஞான சொத்தக்களின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் தலைமை அலுவலகத்திற்கும் மாதிரி தென்னை தோட்டத்திற்குமிடையே இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களுக்காக பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளுக்கிடையே பல ஆண்டுகளாக சமப்படாத மீதி முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டதுடன் அதற்கிணங்க தீர்க்கப்படாத கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் 06 மாதிரி தென்னை பூங்கபாக்களின் ரூபா 31,348,289 மொத்த தொகையான வரவு மீதியும் 06 தென்னை தோட்டங்களின் ரூபா 50,374,300 மொத்த | எதிர்காலத்தில் மாதிரி தென்னை தோட்டங்களின் நடைமுறைக் கணக்கில் காணப்படுகின்ற மீதிகள் தொடர்பான வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைக் கணக்குகளுக்கிடையிலான மீதிகளை சரியாக சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான செலவு மீதிகளை ஒன்றுக்கொன்று தீர்த்துவைத்ததன் பின்னர் மாதிரி தென்னை தோட்டங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 19,026,011 பணம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் உள்ள ஒரு செலவு மீதியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | தென்னை பயிர்ச் செய்கை சபையின் 39 நாற்று மேடைகளுக்கு தலைமை அலுவலகத்தினால் பிராந்திய அலுவலகங்களினூடாக மாதாந்தம் கிடைக்கின்ற பணத்திலிருந்து அந்த நாற்று மேடைகளின் அனைத்து நாளாந்த செலவுகளையும் மேற்கொண்டதன் பின்னர் ஆண்டின் இறுதியின் போது மிகுதிப் பணத்தை தலைமை அலுவலகத்திற்கு மீள அனுப்பியதன் பின்னர் நாற்றுமேடை பேரேட்டுக் கணக்கினை சமப்படுத்தாமையினால் பல ஆண்டுகளாக நாற்றுமேடை பேரேட்டுக் கணக்கில் முன்கொண்டுவரப்பட்ட வரவு மற்றும் செலவு மீதிகள் காணப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் இறுதியில் அந்த வரவு மற்றும் செலவு மீதிகளின் வித்தியாசம் ரூபா 4,675,275 தொகை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நாற்று மேடைக் கணக்கினை சமப்படுத்தி கணக்கு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சரியாக செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் தலைமை அலுவலகத்தினால் நீர்கொழும்பு விதைத் தேங்காய் பிரிவிற்கு விதைத் தேங்பகாய்களை எடுத்துச் செல்லல், விதைத் தேங்காய் பிரிவின் எரிபொருள் செலவுகள் முதலிய நாளாந்த செலவுகளை | மீதியினுள் நிலையான சொத்துக்கள் தொடர்பான மீதி காணப்படாததனால் 2022-12-31 ஆந் திகதிக்கு முன்னைய ஆண்டின் செம்மையாக்கல் கணக்கிற்கு செம்மையாக்கி சரிசெய்வதற்கு | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய மீதியினை சரியாக செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்வதற்காக வழங்கப்படுகின்ற பணம் ஆண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,703,686 தொகையான வரவு மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான மாத்தறை வெலிகமவில் அமைந்துள்ள 15 ஏக்கர் காணி “தென்னை ஓலை கருகுதல் மற்றும் சுருங்குதல் நோய்க்கு தாக்குப் பிடிக்கும் எதிர்ப்புத்திறன் விதைத் தோட்டத்தினை” நிர்மாணிப்பதற்காக தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை ரூபா 1,125,000 மொத்த தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்படாதிருந்ததுடன் கிடைக்க வேண்டிய மீதியாக கணக்கீடு செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,125,000 பணம் 2022-12-31 ஆந் திகதியில் கிடைக்க வேண்டிய பணமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அப்பணத்தை தென்னை பயிர்ச் செய்கை சபையினால் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகைப் பணத்தை முறைப்படியாக அறவீடு செய்வதற்கும் அறவிட வேண்டிய மீதியினை சரியாக நிதிக்கூற்றுக்கில் காட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பாசிக்குடா சுற்றுலா செயற்திட்டம் தொடர்பாக கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 22,197,339 தொகையான மீண்டுவரும் செலவு மாதிரி தென்னை பூங்காவின் கீழ் நீண்டகால முதலீடாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நீண்டகால முதலீட்டின் பெறுமதியானது அத்தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பாசிக்குடா சுற்றுலா செயற்திட்டத்தினுள் இனங்காணக்கூடிய நிலையான சொத்துக்கள் இல்லாததனால் இப்பெறுமதி 2022-12-31 ஆந் திகதியில் முன்னைய ஆண்டிற்கு செம்மையாக்கி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முதலீட:டுப் பெறுமதியிலிருந்து அச்செலவினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2021 ஆம் ஆண்டிற்கான கப்ருக செயற்திட்டத்தின் முதலீடுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையான வைப்பு வட்டி ரூபா 1,996,293 மற்றும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 546,630 ஆக மொத்த வட்டி வருமானம் ரூபா 2,542,923 ஆக இருந்த போதிலும் கப்ருக செயற்திட்டத்தின் நிதி கூற்றுக்களில் வட்டி வருமானம் ரூபா 2,988,370 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் வட்டி வருமானம் ரூபா 445,447 ஆல் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் முடியவடைந்த ஆண்டிற்கான கப்ருக கடன் திட்டத்தின் பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 445,447 பணம் மிகையாக கிடைத்தமை முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலாக குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் பெற்ற வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | வருடாந்த வட்டி வருமானத்தை சரியாக கணித்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | பன்னல பிரதேச செயலகத்தினால் 331 ஏக்கர் 01 ரூட் அளவான மஹயாய தோட்ட காணி 1993 யூலை 21 ஆந் திகதி நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 7,813,048 ஆக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க 01 பேச்சர்ஸின் பெறுமதி ரூபா 147 ஆன குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை காணியின் சரியான பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மஹயாய தோட்டத்தின் காணியை மீள்மதிப்புச் செய்ததன் பின்னர் மீள்மதிப்பு பெறுமதியை அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணிகளின் பெறுமதியை சரியாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளரின் (வருமானம்) 2021 மே 20 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க 1974 இலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு, பாசிக்குடா தோட்டம், | 03 தென்னை தோட்டங்களை பயன்படுத்தும் கட்டணம் சம்பந்தமாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு திறைசேரி காணி மறுசீரமைப்பு | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய பயன்டபாட்டுக் கட்டணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | குருனாகல் ஹாவாலீன் தோட்டம், கர்ட் லேன்ட் தோட்டம் ஆகிய 03 தென்னை தோட்டங்களின் பயன்பாட்டுக் கட்டணமாக ரூபா 156,928,599 தொகை அந்த சபைக்கு செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படாததுடன் நிதி கூற்றுக்களில் அது சம்பந்தமாக ஒதுக்கீடு செய்தல் அல்லது வெளிப்படுத்துதலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழு என்பவற்றுடன் கலந்துரையாடியதன் பின்னர் கிடைத்த தீர்மானத்திற்கு இணங்க தென்னை பயிர்ச் செய்கை சபையினால் செலுத்த வேண்டிய பெறமதி தொடர்பாக அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்துவதற்கும் நிதிக்கூற்றுக்களில் உரிய ஒதுக்கீடுகளைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் தென்னை பயிர்ச் செய்கை சபையின் தேங்காய் விற்பனை வருமானம் ரூபா 2,095,743 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் லேனவ மாதிரி தென்னை தோட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய தேங்காய் ஏல விற்பனை வருமானமாகிய ரூபா 134,313 தொகை இரண்டு தடவைகள் வருமானத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் தேங்காய் விற்பனைகளிலிருந்து கிடைக்க வேண்டிய கடன் பட்டோர் கணக்கில் குறைத்து காட்டப்பட்டுள்ள ரூபா 2,095,743 மீதியானது தவறுதலாக 2022 ஆம் ஆண்டில் தேங்காய் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் லேனாவ மாதிரி தென்னை தோட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய தேங்காய் ஏல விற்பனை வருமானமாகிய ரூபா 134,313 பெறுமதியை இரண்டு தடவைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டமையை 2022-12-31 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை சரியாக கணித்து நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மாதிரி தென்னை தோட்டங்களின் இலாபம் ரூபா 242,987,320 ஆக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் அந்த பெறுமதி ரூபா 242,835,000 ஆக பதியப்பட்டிருந்ததனால் ஆண்டின் வருமானம் ரூபா 152,320 இனால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இது கணித தவறாக இருந்ததுடன் உப பட்டோலையில் உள்ள மீதி சரியாக காட்டப்பட்டுள்ளது. | மாதிரி தென்னை தோட்டங்களின் இலாபம் வருமானக் கூற்றில் சரியாக பதியப்படுதல் வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | கண்டி பத்தினி தேவாலயத்தின் குத்தகை உறுதியின் மூலம் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 121 ஏக்கர் 01 ரூட் 07 பேச்சர்ஸ் அளவான ரன்தெனிய தோட்டத்தின் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான லேனவ தோட்டத்தின் ரூபா 1,255,020 தொகையான நில அளவைக் கட்டணத்தின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான காணியின் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 1,255,020 | காணியின் திட்டம் | ரன்தெனிய தோட்டம் மற்றும் லேனவ தோட்டத்திற்கான உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பான தகவல்களைத் தேடிப்பார்த்து அடுத்துவரும் காலத்தில் உரிய செம்மையாக்கல்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செம்மையாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காணிகளின் திட்ட வரைபடங்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 17 கடன்பட்டோர் கணக்குகள் தொடர்பான ரூபா 55,783,581 தொகையான மீதிகளுக்காக மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிகப்படவில்லை. | 55,783,581 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் | 2021 ஆம் ஆண்டிற்குரிய கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் பதில் கிடைக்கவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்துவதன் மூலம் கடன்பட்டோர் மீதிகளின் பௌதீக ரீதியான உள்ளமையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | 2021 மே மாதம் 13 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 23 ஆந் திகதி வரை 33 சந்தர்ப்பங்களின் போது தென்னை பயிர்ச்செய்கை சபையானது தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தேங்காய்களை விற்பனை செய்யும் ஏல விற்பனைக்கு 08 தென்னை தோட்டங்களின் 2,588,795 தேங்காய்களை முன்வைத்து 06 கொள்வனவாளர்களுக்கு ரூபா 146,437,679 பெறுமதியான தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அதன் போது லொட் இலக்கம், தவணை இலக்கம், அலகு விலை, மொத்தப் பெறுமதி, தண்டப் பணம் அல்லது | 146,437,679 | விற்பனை இன்வொயிஸ்கள் | ஒவ்வொரு இருப்புக்குமாக கொள்வனவாளர்களினால் 100% ஆன பெறுமதி செலுத்தப்பட்டுள்ளதுடன் பணத்தை பொறுப்பேற்கும் இன்வொயிஸ் வழங்கப்பட்டுள்ளது. மாதிரி தென்னை தோட்டங்கள் மற்றும் நாற்றுமேடைகள் அபிவிருத்தி பிரிவிடமிருந்து தேங்காய்களை வழங்கும் அறிவித்தல் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஏலவிற்பனை சட்டவிதிகளின் கீழ் தேங்காய்கள் அப்புறப்படுத்தப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு இருப்புக்குமாக வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டு அனைத்து தண்டப் பணங்களையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக | தேங்காய் ஏல விற்பனையின் போது இடம்பெற்ற விற்பனைகளுக்காக உரிய கொள்வனவாளர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட தேங்காய் இருப்பின் விபரத்தை உள்ளடக்கி இன்வொயிஸ் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏனைய கழித்தல்கள் தொடர்பாக கொள்வனவாளர்களுக்கு தெரியப்படுத்தும் இன்வொயிஸ் வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது உரிய கொள்வனவாளர்களுக்கு இன்வொயிஸ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தரகர் கம்பனிக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) முன்னாள் பொது முகாமையாளருக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மிகையாகச் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 113,216 மொத்த தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021 நவம்பர் மாத்தின் போது இடமாற்றம் பெற்று ஏனைய நிறுவனத்திற்குச் செல்லும் போது இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களினால் நிறுவனஙகளுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடாகும். அதற்கிணங்க இப்பணம் அந்த பொது முகாமையாளருக்கு மிகையாகச் செலுத்தப்படவில்லை எனவும் அந்த நிறுவனத்திடமிருந்து தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு கிடைக்க வேண்டிய பணமாகும். | தாமதமின்றி இப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட வெலிகம நோய் பரவல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சேதனப் பசளை நிகழ்ச்சித்திட்டத்திற்காக தென்னை அபிவிருத்தி மற்றும் | 2023-03-17 ஆந் திகதி பெருந்தோட்ட அமைச்சில் நடாத்தப்பட்ட கடன் மீதியைத் தீர்த்துவைக்கும் குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டவாறு வெலிகம நோயை | அமைச்சு லங்கா சதொச மற்றும் கட்டிடங்கள் திணைக்களத்திடமிருந்து அறவீடு செய்ய வேண்டியுள்ள பணத்தை அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 6,573,572 தொகையும் 2014 ஆம் ஆண்டில் லங்கா சதொசவிற்கு தேங்காய் விற்பனை செய்ததன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 302,288 தொகையும் கட்டிட திணைக்களத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 372,537 தொகையுமாக மொத்தமாக ரூபா 7,248,397 தொகை 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 5,979,174 மற்றும் ரூபா 594,398 பணத்தை பெற்றுக்கொள்ளும் இயலுமை தற்பொழுது இல்லை என்பதனால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் பதிவழிப்பதற்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு அனுப்பிவைப்பதற்கு முன்னர் இதனை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு பணிப்பாளர் சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செய்வதற்கு முறையான வேலைத் திட்டம் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | சேவையை கைவிட்டுச் சென்ற 100 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,654,349 கடன் பணம் 02 ஆண்டுகளுக்கும் 11 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் அக்கடனை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணத்திற்கு இணங்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொண்டதன் பின்னர் சேவையை கைவிட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடக்கூடிய மீதியை அறவீடு செய்வதற்கும் அறவீடு செய்ய முடியாத 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய நிலுவை மீதிகளை நிதிக்கூற்றுக்களிலிருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1997 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் சபையின் தேங்காய்களை கொள்வனவு | இக்கம்பனி 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை தெங்கு அபிவிருத்தி | சட்ட நடவடிக்கைகளை முறைப்படியாக வழிப்படுத்தி கிடைக்க |

| | | |
|---|---|---|
| செய்த இரண்டு தனியார் கம்பனிகளிடமிருந்து அறவிட வேண˜டிய ரூபா 3,808,156 தொகையினை அறவீடு செய்வதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வழக்கு முறையாக வழிப்படுத்தப்படாததனால் 23 ஆண்டுகள் மற்றும் 24 ஆண்டுகள் காலமாக அப்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. இதில் ரூபா 2,631,781 பணம் அறவிடப்பட வேண்டிய டபிள்யூ.ரீ.வாஸ் மற்றும் கம்பனியை தேடிக்கண்டு பிடிக்க முடியாது எனத் தெரிவித்து 2017 ஆம் ஆண்டின் போது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்த போதிலலும் அக்கம்பனி 2020 ஆம் அண்டில் ஒரு தரகர் கம்பனியாக தென்னை அபிவிருத்தி அதிகார சபையில் தேங்காய் ஏல விற்பனைக்காக பங்குபற்றுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. | அதிகார சபையினுாடாக தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் போது தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் இக்கம்பனி கறுப்பு பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள் ளது. அதற்கிண்ஙக இக்கம்பனிக்கு இவ்வாறான மோசடி நடவடிக்கைகளை அடுத்துவரும் காலங்களில் மேற்கொள்வதற்கு முடியாத வகையில் இக்கம்பனியை கறுப்பு பட்டியலில் சேர்த்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து: கம்பனிகள் பதிவாளருக்கும் தெரியப்படுத:துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு சபை முறையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 02 ஆண்டுகளுக்கும் 07 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக தீர்த்துவைக்கப்படாது காணப்பட்ட 42 நிர்மாணச் செயற்பாடுகள் தொடர்பாக நிறுத்திவைத்த பணம் ரூபா 6,565,730 தொகை உரிய செயற்பாடுகள் தொடர்பாக மதிப்பீடு செய்து தீர்த்துவைப்பத்கு நடவடிக்கை எடுக்கப்படாது வணிக்க் கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | தீர்த்துவைக்கப்படாதுள்ள நிர்மாணச் செயற்பாடுகள் தொடர்பாக இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால மீதிகளை முன்னைய ஆண்டிற்கான வருமானத்திற்குச் செம்மையாக்கி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மாணச் செயற்பாடு தொடர்பாக நிறுத்திவைக்கப்பட்ட பணத்தை செலுத்துவதற்கு அல்லது வருமானமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) களஞ்சிய பொறுப்பாளர் மற்றும் காசாளராக சேவையாற்றி தற்பொழுது சேவையிலிருந்து நீங்கியுள்ள 08 நபர்களிடமிருந்து | தற்பொழுது சேவையிலிருந்து நீங்கியுள்ள 08 நபர்களிடமிருந்து 1979 | தற்பொழுது சேவையிலிருந்து நீங்கியுள்ள உத்தியோகத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 1979 இலிருந்து 1992 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டடுள்ள மொத்தமாக ரூபா 603,818 தொகையான வைப்பு மீதிகளுக்கு 29 ஆண்டுகளிலிருந்து 42 ஆண்டுகள் வரையான காலம் எடுத்திருந்தும் இன்றுவரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலிருந்து 1992 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மொத்தமாக ரூபா 603,818 தொகையான வைப்பு மீதிகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்பான நடவடிக்கையை துரிதமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நானாவித கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்பட்டிருந்த 11 உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 671,228 தொகையான 2020 ஆம் ஆண்டில் செலுத்தப்படாத சம்பளம் மீளாய்வாண்டின் இறுதி வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு தொடர்பாக கடன்கொடுத்தோர்களின் கீழ் காட்டப்பட்டிருந்த 11 உத்தியோகத்தர்களுக்குரிய செலுத்தப்படாத சம்பளத்தை வருமானத்திற்கு செம்மையாக்கி நிதிக்கூற்றுக்களிலிருந் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்தப்படாத சம்பளம் தொடர்பாக தேடிப்பார்த்து உரிய கொடுக்கல் வாங்கலினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1999 இன் 35 ஆம் இலக்க பயிர் பாதுகாப்பு அதிகாரச் சட்டத்தின் 12(2) ஆம் உபபிரிவின் கீழ் அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 2009 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 1623/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள கட்டளைத் தொகுப்பின் 04 ஆம் | நோயுள்ள ஒரு மரமாக அடையாளமிடப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அந்த மரத்தை வெட்டி அகற்றுதல், மற்றும் கட்டளையிடப்படுகின்ற முறைமையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் வெலிகம தென்னை ஓலை கருகுதல் மற்றும் வெளுகுதல் நோய்க்கு தாக்குப் | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது உருவாகியிருந்த கொவிட் தொற்று நோய் நிலைமையினை முன்னிட்டு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு காணிக்குச் சென்று தடுப்பூசி இடுவதற்கு முடியாததனால் 2021-12-31 ஆந் திகதியளவில் 13,484 | இனங்காணப்பட்டுள்ள 13,484 நோய் தென்னை மரங்களை உடனடியாக அழித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவின் பிரகாரம் சபையின் தலைவரினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புரை | பிடிக்கும் மரமாக இனங்காணப்பட்டு சபை அடையாளமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை காணி உரிமையாளர்கள் அல்லது சபையினால் வெட்டி அகற்றப்படாத மரங்களின் எண்ணிக்கை 13,484 ஆகும். | மரங்கள் களத்தில் மிகுதியாக இருந்தது. எனினும் இந்த நோய் மரங்களின் அளவினையும் உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18,650 நோய் மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வருடாந்த வரைவு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 02 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | அடுத்துவரும் ஆண்டுகளில் 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வரைபு ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றுக்களை தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | 2014 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் விதிக்கப்பட்டுள்ள தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தேங்காய் ஏல விற்பனை சட்டத் தொகுப்பின்<br>(i) 21(அ)(ஆ),(ஈ) மற்றும் 22(ஈ) சட்டவிதி | தேங்காய் ஏல விற்பனையின் போது தேங்காய்களை கொள்வனவு செய்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் 25 சதவீதமும் 35 நாட்களுக்குள் 75 சதவீதமுமாக கொள்வனவாளர்களினால் முழுப்பணமும் செலுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறு செலுத்தவில்லையாயின் தாமதக் கட்டணம் மற்றும் 20 சதவீத நில வாடகைக்காக | 2021 ஆம் ஆண்டிற்காக தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட்ட அனைத்து தேங்காய் இருப்புக்குமாக அது தொடர்பான அனைத்து தண்டப் பணமும் அறவீடு செய்யப்பட்டு மிகுதிப் பணம் இருக்குமாயின் தரகுக் கம்பனிக்கு எழுத்துமூல | அனைத்து விற்பனைக்குமாக முறையான இன்வொயிஸ் வழங்கப்பட வேண்டியதுடன் கொள்வனவாளரிடமிருந்து முறைப்படி பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செலுத்த வேண்டிய தண்டப் பணமும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் விற்பனைக்காக இன்வொயிஸ் வழங்கப்படாததனால் உரிய தண்டப் பணமும் தாமதக் கட்டணமும் உரிய முறைப்படி அறவிடப்பட்டதா என்பதனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | அங்கீகாரத்துடன் காசோலைவாயிலாக கொடுப்பனவு செய்யப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 611,133,769 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 131,470,029 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 479,633,740 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது அமைச்சிடமிருந்து முறையே ரூபா 259,000,000 மற்றும் ரூபா 100,000,000 தொகைகள் நீர்ப்பாசனச் செயற்திட்டத்திற்கும் தென்னங்காணி அபிவிருத்தி செயற்திட்டத்திற்கும் கிடைத்திருந்தமையும் நாற்றுமேடை இலாபம், மாதிரி தென்னந்தோட்ட இலாபம் மற்றும் கப்ருக செயற்திட்ட வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 124,650,158 ஆல் ரூபா 200,549,822 ஆல் மற்றும் ரூபா 38,129,208 ஆல் அதிகரித்தல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் முறையே 4:1 மற்றும் 2:1 ஆகும். இறுதி இருப்பு மற்றும் காசுக்குச் சமனானவைகளின் மொத்தம் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,295,399,307 தொகையும் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 599,525,262 தொகையும் ஆக அதிக தொழிற்படு மூலதன நிலைமையின் காரணமாக நடைமுறை மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் அதிக பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தென்னை பயிரிடக் கூடிய காணிகளைத் தெரிவு செய்து அவற்றில் தென்னை பயிர்ச் செய்கையை புதிதாக ஆரம்பித்து அக்காணிகளை வணிக ரீதியான தென்னங் காணிகளாக மாற்றுதல் மற்றும் | வயல் காணிகளில் தென்னைப் பயிர் போன்ற பல்லாண்டு பயிர்களை பயிரிடுவதற்காக கமநல சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் | முறையாக திட்டமிட்ட இலக்குகளுடன் தற்பொழுது காணப்படுகின்ற தென்னங் காணிகளின் அளவினை அதிகரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | தற்பொழுது காணப்படுகின்ற தென்னங் காணிகளின் அளவினை அதிகரிப்பதும் அதன் மூலம் தேங்காய் விளைச்சலினை அதிகரிக்கும் குறிக்கோளில் தரிசான 2500 ஏக்கர் வயல் காணிகளை வினைத்திறனான வணிகப் பிரிவாக மாற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்க அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 100,000,000 பணம் சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் 380 ஏக்கர்கள் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை 03 ஏக்கர் அரசாங்க காணியும் 27.5 ஏக்கர் தனிப்பட்ட காணியுமாக எதிர்பார்த்த அளவில் 8 சதவீத செயல்முன்னேற்றம் மாத்திரம் சபையினால் அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு தென்னை நாற்றுக்களும் ஒரு ஏக்கருக்கு ரூபா 80,000 பண நிவாரணமும் வழங்குதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் இச்செயற்திட்டத்தினை மேற்கொள்வதற்கும் சபைக்கு முடியாதிருந்தது. | பெற்றுக்கொள்ளுதல் அத்தியவசியமானது என்பதனால் விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் கமநல சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் போது 3.25 ஏக்கர்களுக்காக மாத்திரம் கமநல சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மிகுதி அளவானவற்றிற்காக அங்கீகாரம் கிடைக்காததனால் இச்செயற்திட்டத்தீனை அமுல்ப்படுத்த முடியாதுள்ளது. | விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டத்துடனான செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய 03 மாவட்டங்களில் ஓலை, கருகுதல் மற்றும் வெளுருதல் நோய் வலயத்தில் 2008 இலிருந்து 2021 வரையான காலப்பகுதியில் நோயுள்ள 332,075 தென்னை மரங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அவற்றில் 309,622 மரங்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் 285,715 மரங்களுக்காக ரூபா 610,275,180 தொகை இழப்பீட்டுப் பணமாக வழங்கப்பட்டிருந்தன. இந்த நோய் இனங்காணப்பட்டு 14 ஆண்டுகள் கடந்திருந்தும் | இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கான ஒரே பரிகாரமான நோய் வலயத்தில் நோய் அறிகுறிகள் காணப்படுகின்ற அனைத்து தென்னை மரங்களையும் நாற்றுக்களையும் வெட்டி அகற்றுதல் என தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் சிபாரிசு முன்வைக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் நிலைமையினை | நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு நிரந்தர பரிகாரத்தினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தென்மாகாணத்தில் இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு அல்லது ஒழிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையும் முடியாதிருந்ததுடன் நோய் வலயத்தில் நோய் அறிகுறிகள் காணப்படகின்ற மரங்களையும் நாற்றுக்களையும் வெட்டி அகற்றுவது மாத்திரம் இடம்பெற்றுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | முன்னிட்டு ஆண்டின் ஆரம்பத்தில் திட்டமிட்டவாறு வெளிக்கள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது. | |
| (இ) | 2021 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வெலிகம தென்னை மரங்களின் ஓலைகள் கருகுதல் மற்றும் வெளிருதல் நோயைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது நோய் வலயமாக இனங்காணப்பட்டிருந்த மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களின் 408 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணிகள் பரீட்சிக்கப்பட்டு நோய் மரங்களை இனங்கண்டு அடையாளமிடுவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 15,640,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்ப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மூன்று மாவட்டங்களின் 257 கிராம உத்தியோகாத்தர் பிரிவுகளின் காணிகள் பரீட்சிக்கப்பட்டு நோய் மரங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது நோய் வலயத்திற்குரிய 408 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சார்ந்த காணிகளைப் பரீட்சிப்பதற்கு திட்டமிடப்பட்டது. எனினும் இந்த ஆண்டில் காணப்பட்ட கொவிட் நிலைமையின் காரணமாக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு முடியாதிருந்தது. அவ்வாறே வெளிக்கள உத்தியோகத்தர்கள் வெளிக்கள கடமைகளில் ஈடுபடுவதும் இந்த ஆண்டின் போது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | நோய் மரங்களை இனங்காண்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டின் போது கோகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு அருகாமையில் தென்னைப் பயர்ச் செய்கைக்கு ‘‘வெள்ளை இலையான்’’ கிருமிகளின் ஆக்கிரமிப்பு 2020 ஆம் ஆண்டின் போது அதிகரித்து கம்பஹா கொழும்பு மற்றும் | இப்பாதிப்புக்கள் இனங்காஒப்பட்ட சந்தர்ப்பத்திலேயே தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கிய சிபாரிசு வெளிக்கள மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறே எங்கள் நிறுவனத்தின் அனைத்து | வெள்ளை இலையான் நோயை கட்டுப்படுத்துதல் மற்றும் நோயை ஒழிப்பதற்கான நிரந்தர பரிகாரத்தினை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களுத்துறை மாவட்டங்களில் வெள்ளை இலையான்கள் அபரிமிதமாக பெருகியுள்ளமையை காணக்கூடியதாக இருந்ததுடன் தற்பொழுது இலங்கையில் 13 பிராந்திய அலுவலகங்களின் 132 பிரசே செயலகப் பிரிவுகள் வரை விரிவடைந்திருந்தும் பாதிப்புக்களை கட்டுப்படுத்துவதற்காக போதியளவு திரவங்கள் விசுரும் இயந்திரங்கள் இல்லாமை மற்றும் கிரீஸ் பூசுதலானது உயரம் கூடிய தென்னை மரங்களுக்கு நடைமுறையில் மேற்கொள்வது சிக்கலானது போன்ற காரணங்களின் அடிப்படையில் நோயை கட்டுப்படுத்துவதற்கு முடியாததாக இருந்தது. | வெளிக்கள உத்தியோகத்தர்களாலும் இப்பாதிப்புக்கள் அதிகரிக்கப்பட்ட பிரதேசங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு தெரியப்படுத்துதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுதும் இப்பாதிப்புக்களை கட்டுப்படுத்தும் செயறபாடு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (உ) | செவ்விளநீர் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக தென்னை அபிவிருத்தி அதிகார சபையினால் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு 2020 ஆம் ஆண்டின் போது வழங்கிய ரூபா 25 மில்லியன் தொகை உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையும் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | செவ்விளநீர் பயிர்ச் செய்ரகையை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாடானது 2023 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிகத்தை திட்டத்தின் கீழ் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. | செச்வீளநீர் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காக கிடைக்கும் நிதியை அச்செற்திட்டம் வெற்றியளிப்பதற்கு பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மட்டக்களப்பு, குருனாகல், அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள காணிகளின் 09 தென்னைத் தோட்டங்கள் 50 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக தென்னை பயிர்ச்செய்கை சபையினால் பேணப்பட்டு வந்திருந்தும் இக்காணிகளை முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு முடியாதிருந்தது. | 2016 ஆம் ஆண்டின் போது 05 ஆண்டுகளுக்கு நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட திட்ட வரைபடம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் 04 காணிகளுக்கு ரூபா 418 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சபைக்கு | சபையினால் பயன்படுத்துகின்ற காணிகளை முறைப்படியாக பொறுப்பற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (எ) | மீளாய்வாண்டின் போது நோய் மரங்களை அழிப்பதற்காக 4,800 மரங்களுக்கு ஊசி மருந்துகள் பாய்ச்சுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் ஆண்டின் இறுதி வரை 571 நோய்மரங்களுக்கு மாத்திரம் ஊசிமருந்துகள் பாய்ச்சப்பட்டிருந்ததனால் எதிர்பார்க்கப்பட்டவாறு 4,229 நோய் மரங்களுக்கு ஊசி மருந்துகள் பாய்ச்சுவதற்கு முடியாதிருந்தது | நோய் வலயத்தில் இனங்காணப்பட்ட நோய் மரங்களை விவசாயிகள் களத்திலிருந்து அகற்றாத சந்தர்ப்பங்களில் அகற்றுவதற்கு கிளைபொசெட் இரசாயன ஊசி மருந்து பாய்ச்சப்படுகின்றது. அந்த இரசாயனம் இறக்குமதி செய்வது அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ளதனால் திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | நோய் மரங்களை அகற்றி நோயை கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நோய் வலயத்தில் அமைந்துள்ள மூன்று மாவட்டங்களில் நோய் மரங்கள் வெட்டப்பட்டுள்ள காணிச் சொந்தக்காரர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக இலை சுருங்குதல் மற்றும் வெலிகம நோய்க்கு தாக்குப்பிடிக்கின்ற எதிர்காப்பு நாற்றுக்களை நடுதல் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் நோய் ஆரம்பமான 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வெட்டி அகற்றப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 309,622 ஆக இருந்த போதிலும் அதற்கு ஒத்ததாக புதிதாக வழங்கிய எதிர்ப்புத்திறனான தென்னை நாற்றுக்களின் எண்ணிக்கை 88,478 அல்லது 28 சதவீதம் ஆன ஆகக் குறைந்த சதவீதமாக இருந்ததுடன் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது எதிர்ப்புத்திறன் நாற்றுக்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஓலை கருகுதல் மற்றும் வெளுருதல் நோய்க்கு தாக்குப் பிடிக்கும் இனமாக ஓலை குள்ளமான இனத்தை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் சிபாரிசு செய்திருந்தது. இவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தும் தேங்காய் விளைச்சல் சிறிதாக இருத்தல் கொப்பரை மெல்லியதாக இருத்தல் என்பன விவசாயிகளின் ஆர்வத்தை குறைவடையச் செய்ததன் காரணமாக விதைத் தேங்காய் சபையினால் வழங்கப்படவில்லை. | அகற்றப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக நோய்க்கு தாக்குப் பிடிக்கின்ற எதிர்ப்புத்திறனுள்ள நாற்றுக்களை வழங்குவதன் மூலம் காணி உரிமையாளரின் வாழ்க்கை மட்டத்தை நல்ல நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (ஆ) | தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் சபையில் காணப்படுகின்ற நாற்று மேடைகள் நோய் எதிர்ப்புதிறனுள்ள புதிய இரட்டை பயன் நாற்று மேடையாக விரிவுபடுத்தப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதி வரை 06 ஆண்டுகள் கடந்திருந்தும் வெலிகமவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விதைத் தோட்டமானது அவ்வாறான எதிர்ப்புத் திறனுள்ள 3193 இரட்டைப் பயன் விதை நாற்றுக்கள் போன்ற சிறிய எண்ணிக்கை மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | தென்னை நாற்றுக்களை உற்பத்தி செய்யும் செயற்பாட்டின் பொறுப்பு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திடம் காணப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாம் இரு தரப்பினர்களாலும் திட்டமிட்ட வகையில் எதிர்ப்புத் திறனுள்ள இரட்டைப் பயன் விதை நாற்றுத் தோட்டத்தை ஸ்தாபித்தல் வேண்டும். |

## 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கடன் வழங்குவதன் கீழ் 1,122 ஏக்கர் தென்னங் காணிகளில் நீர்ப்பாசன முறைமையை ஸ்தாபிப்பதற்கு ரூபா 59,610,000 பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்தவாறு திட்டமிட்ட 15 பிராந்திய அலுவலகங்களில் 508 ஏக்கர்களில் நீர்ப்பாசன முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீர்ாப்பாசன முறைமையை ஸ்தாபிக்கும் பௌதீக செயல்முன்னேற்றம் 61% ஆன பெறுமதியைக் கொண்டிருப்பதற்கு பிரதான காணரமாவது 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நொய் நிலைமையாகும். இந்த தொற்று நோய் நிலைமையின் கீழ் அரசாங்கத்தின் அலுவலக வங்கி முறைமையினைப் போல விவசாயிகள் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பமின்மையை காட்டியதனால் ஆரம்பத்திலேயே திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்தப்படவில்லை | உத்தேச நீர்ப்பாசன முறைமையானது தாமதமின்றி பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் உத்தியோகர்ககளின் மற்றும் ஊழியர்களின் சேமலாப நிதியம் சபையில் ஒரு தனியான நிதியமாக பேணப்படுவதுடன் சேமலாப நிதியத்தில் கடமையாற்றிய நான்கு உத்தியோகத்தர்களால் 2015-2021 இற்கு இடைப்பட்ட காலத்தில் நிதியத்தின் 50 காசோலைகள் தங்களின் பெயரில் மற்றும் உறவினர்களின் பெயரில் எழுதி ரூபா 73,839,369 பணம் மோசடி செய்யப்பட்டிருந்தது. என தென்னை கித்துள் மற்றும் பனைப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துதல் மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பொருட்களை உற்பத்திசெய்தல் மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்துதல் இராஜாங்க அமைச்சின் விசேட புலனாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நிதியத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை ஸ்தாபிக்கப்படாமை, உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை, நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரம் ஒப்படைக்கப்படாது உத்தியோகத்தர்களால் பல ஆண்டுகளாக நிதியத்தின் ஒரே செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தமை, நிதியத்தின் நடவடிக்கைகள் தொழில் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்காமை முதலிய விடயங்களுக்கு இணங்க நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை தனது பொறுப்பினை முறைப்படியாக நிறைவேற்றியிருக்காமை என்பன இந்த மோசடிக்கு காரணமாக | ல. 2015-2021 இற்கு இடைப்பட்ட காலத்தில் சேமலாப நிதியத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையாற்றிய செயலாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அவரின் உறவினர் ரூபா 73,839,369 பணத்தை மோசடி செய்திருந்ததுடன் தற்பொழுது அதற்காக சரியான உள்ளகக் கட்டப்பாட:டு முறைமை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை ஸ்தாபித்தல் உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ளல் கணக்கேடுகளையும் பதிவேடுகளையும் நாளதுவரையாக்குதல், நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரத்தினை ஒப்படைப்பதற்கு நிதியத்தின் நடவடிக்கைகளை தொழில் ஆணைாளரின் கவனத்திற்கு முன்வைத்தல், மோசடி செய்த பணத்தை அறவீடு செய்வதற்கு முடியுமான வகையில் தமாமதமின்றி வழக்கு நடவடிக்கைகள் வழிப்படுத்தப்படுதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்தது. என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மோசடி செய்த பணத்தில் ரூபா 3,790,050 தொகை நிதியத்தில் சேவையாற்றிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தமை மற்றும் நான்கு உத்தியோகத்தர்களில் மூன்று உத்தியோகனத்தர்கள் சேவையிலிருந்து நீக்கிவைக்கப்பட்டுள்ளதுடன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் பீ/4515/21 ஆம் இலக்கத்தின் கீழ் கடுவெல நீதவான் நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு அவர்கள் மூவரும் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒரு உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று விசாரணை முடிவுறுத்தப்பட்டமை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. | | | |
| (இ) | தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு இரண்டாம் நிலை அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பொது முகாமையாளருக்கு வழங்கிய வாடகை வீட்டிற்கு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 420,000 தொகை மற்றும் அந்த வீட்டிற்கு தனிப்பட்ட பாவனைக்காக தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக சபையினால் ரூபா 372,149 செலவு செய்யப்பட்டிருந்தது. 2020 சனவரி 05 ஆந் திகதிய PED/A/CCB/1/2(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் | சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு ஒரு கடிதத்தினை அனுப்பி உரிய பணத்தை அறவிட்டு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க அதன் செயல் முன்னேற்றம் தொடர்பாக எங்களால் வரிசை அமைச்சிடம் விசாரித்திருந்தும் இன்றுவரை அந்நடவடிக்கையின் செயல்முன்னேற்றம் | அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பொதுமுகாமையாளர் பதவி தலைமை அலுவலகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள ஒரு பதவி என்பதனால் செலுத்திய குத்தகை வாடகை மற்றும் தளபாடங்களுக்காக சபை மேற்கொண்ட செலவுகளை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அல்லது அக்கொடுப்பனவுகளை அங்கீகரித்த அதிகாரம் வழங்கிய அல்லது | |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பொது முகாமையாளர் பதவி தலைமை அலுவலகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பதவி என்பதனால் உத்தியோகபூர்வ இல்லத்தினை வழங்குதல் அல்லது பாவனைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு இல்லை எனவும் அமைச்சு செயலாளரின் 2022 பெப்ரவரி 22 ஆந் திகதிய SMCKP/IA/CCB ஆம் இலக்க கடித்தின் பிரகாரம் இவ்விடயத்தின் அடிப்படையில் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை பொது முகாமையாளரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரியப்படுத்தியிருந்தும் முன்னாள் பொது முகாமையாளரிடமிருந்து ரூபா 7,200 பணம் மாத்திரம் அறவீடு செய்து உத்தியோகத்தர் 2021 திசெம்பர் 20 ஆந் திகதி சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். | தொடர்பான விபரம் எங்களுக்கு கிடைக்கவில்லை. | சான்றுபடுத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீ.ஈ.டி 12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.8.2 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி சபையின் தலைவர் மற்றும் சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கி 27 உத்தியோகத்தர்களுக்கு 2011 நவம்பர் மாத்திலிருந்து 2015 சனவரி மாதம் வரை ரூபா 17,186,549 தொகை தொழில்படி பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை இன்று வரை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | தொழில் படியினை அறவீடு செய்வதற்கு எதிர்ப்பினைக் காட்டி உரிய உத்தியோகத்தளினால் அழைப்பாணையை பெற்றுக்கொள்வதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறைப்பாட்டினைத் தொடுத்திருந்தார் என தெரிவிக்கப்பட்டது. | திறைசேரியின் அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில் படியினை மேலும் தாமதிக்காது உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியதுடன் அப்படியினைச் செலுத்துவதற்கு சான்றுபடுத்திய மற்றும் அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2011 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது குழாய்க் கிணறுகள் செயற்திட்டத்திற்காக கிடைத்து மிகுதியாக உள்ள ரூபா 236,324 தொகையும் பசளை நிலவாரண செயற்திட்டத்திற்காக கிடைத்து மிகுதியாக உள்ள ரூபா 568,452 தொகையுமாக வரிசை அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 798,776 மொத்த தொகை பயன்படுத்தப்படாது வங்கி கணக்குகளில் காணப்பட்டன. | குறைவாகப் பயன்படுத்தி கணக்குகளில் இருந்த மீதிகளை பணிப்பாளர் கள் சபையின் அங்கீகாரதத்தின் கீழ் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய பணத்தை மீளப் பெற்று செயற்பாடற்ற வங்கி கணக்குகளை மூடுதல் வேண்டும். |

### 3.5 செயற்திட்டத்தில் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டில் அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் தென்னங் காணிகளில் நீர்ப்பாசன முறைமையை உருவாக்குதல் மற்றும் வண்டுகளை கட்டுப்படுத்தும் செயற்திட்டம் ஆகிய 02 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 269.35 மில்லியன் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை செலவு செய்த பணம் ரூபா 257.09 மில்லியன் என்பதனால் ரூபா 12.26 மில்லியன் அல்லது 4.5 சதவீதமான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் 02 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக கிடைத்த ரூபா 269.35 மில்லியனில் மிகுதிப் பணமானது 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. | அரசாங்கத்திடமிருந்து கிடைத்த நிதியை முறையான திட்டத்துடன் செயற்திட்டங்களில் ஈடுபடுத்தி அவற்றினை வினைத்திறனான செயற்திட்டமாக வெற்றியளிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வெலிகம ஓலை கருகுதல் மற்றும் வெளுருதல் நோயை கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 50,360,000 பணம் சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை | 2021 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இந்த ஆண்டில் காணப்பட்ட கொவிட் | அரசாங்கத்திடமிருந்து கிடைத்த நிதி ஏற்பாட்டினை முறையான கவனத்துடன் முகாமைத்துவம் செய்து செயற்திட்டத்தை வெற்றியளிக்கச் செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 17,720,000 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததனால் அங்கீகரித்த நிதி ஏற்பாட்டில் ரூபா 32,640,000 அல்லது 65 சதவீதமான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைமையை முன்னிட்டு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு களத்திற்குச் சென்று அடையாளமிடுதல் அகற்றுதல், தடுப்பூசி ஏற்றுதல் போன்ற தொடக்க நடவடிக்கைகளை முன்னைய ஆண்டுகளைப் போல் மேற்கொள்ள முடியாதிருந்தது. | |

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2012 ஆம் ஆண்டின் போது அனுராதபுரம் கட்டுகெலியாவவில் சுற்றுலா விடுதியினை நிர்மாணித்தலானது ஒரு தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த கிரயம் ரூபா 11,809,918 ஆகும். நிர்மாண வேலைகள் முடிவடைந்து 04 ஆண்டுகள் ஆகிய குறுங்காலத்திற்குள் கட்டிடத்தின் கீழ் மாடியில் 22 உடைவுகள், கீழ் மாடியின் ஒரு அறையில் டயில்களுடனான சுவரில் 06 வெடிப்புக்களும் ஏற்பட்டு பாதிப்படைந்துள்ளதனைப் போல ஆபத்தான நிலையில் காணப்பட்டதுடன் கட்டிடத்தின் அத்திவாரத்தினை திட்டமிடும் போது அந்த நிலத்தில் காணப்படுகின்ற மண்ணை பற்றி கவனம் செலுத்தாமையும் நிர்மாணம் நியம தரதத்தில் மேற்கொள்ளப்படாமையும் இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அனுராதபுரம், கட்டுகெலியாவையில் சுற்றுலா விடுதியினை நிர்மாணிக்கும் நடவடிக்கை 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் கடந்த 04 ஆண்டுகள் காலப்பகுதியில் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மூலம் வழங்கிய தொழில்நுட்ப அறிக்கையில் அந்த வெடிப்புக்கள் ஆபத்தான நிலையில் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியான பெறுகை நடைமுறையினப் பின்பற்றி நிர்மாணங்களை உரிய முறைமையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 மே 17 ஆந் திகதி தென்னை பயிர்ச் செய்கை சபையின் சுற்றுலா விடுதிக் கட்டிடத்தில் ஏற்பட்ட வெடிப்புக்கள் மற்றும் உடைவுகள் சம்பந்தமாக | அனுராதபுரம் கட்டுகெலியாவ சுற்றுலா விடுதி சம்பந்தமாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் அறிக்கையினை | கட்டிடத்தினை நிர்மாணிக்கும் போது சாத்தியவள ஆய்வின் பின்னர் சுற்றாடல் சான்றிதழினைப் பெற்று முறையான |

| | | |
|---|---|---|
| கட்டிடங்களைப் பரீட்சித்து அறிக்கையை வழங்குமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பிடம் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க அந்த நிறுவனத்தினால் 2022 சனவரி 04 ஆந திகதி அந்த இடத்தில் வெளிக்கள பரீட்சிப்புக்களை மேற்கொண்டதன் பின்னர் வீட்டு வடிவமைப்புத் திட்டம், கட்டமைப்புத் திட்டம், மண்பரிசோதனை அறிக்கை மற்றும் ஏனைய உரிய ஆவணங்களை வழங்குமாறு சபையிடம் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் மண் பரிசோதனை அறிக்கை சபையினால் சமர்ப்பிக்கப்படாததனால் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் மண் பரிசோதனை அறிக்கையை பரீட்சிக்காது 2022 செப்தெம்பர் 16 ஆந் திகதி இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. | வழங்குவது தொடர்பாக வேண்டிக் கொள்ளப்பட்ட வீட்டு வடிவமைப்பு திட்டம், கட்டமைப்புத் திட்டம் மற்றும் உரிய ஏனைய ஆவணங்கள் எங்களால் வழங்கப்பட்டிருந்ததுடன் மண் பரிசோதனை அறிக்கை சம்பந்தமான தகவல்கள் இருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் நிதி ஏற்பாட்டினை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2022 ஆம் ஆண்டின் போது சபையினால் அனுராதபுரம் சுற்றுலா விடுதிக் கட்டிடத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ரூபா 3,999,800 திருத்தம் செய்யும் மதிப்பீட்டு தேசிய கட்டிடங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை திருத்தம் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அறிக்கை மற்றும் மதிப்பீடு 2022-09-27 ஆந் திகதி சபைக்கு கிடைத்துள்ளது. அதற்கிணங்க இந்த சுற்றுலா விடுதியினை திருத்தம் செய்வது தொடர்பான மேலதிக நடவடிக்கைக்காக தொழில்நுட்ப அறிக்கையின் மற்றும் மதிப்பீட்டின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது அதற்குத் தேவையான அனைத்து அறிக்கைகளையும் பெற்று முறையாக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் நிதி ஏற்பாட்டினை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி நிர்மாணித்தல் வேண்டும். |

**3.7 மனிதவளங்கள் முகாமைத:துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் பிரதான 03 பதவிகளை பொதுமுகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க 2023-01-17 ஆந் திகதி | ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுதல் |

| | | |
|---|---|---|
| மற்றும் பிரதி பொது முகாமையாளர்ட( (விரிவாக்கலும் அபிவிருத்தியும்) ஆகிய பதவிகள் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்டன. மேற்கூறிய பதவிகள் 2020 ஆம் ஆண்டின் போதும் வெற்றிடமாகக் காணபட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க தொழில்முயச்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்து 2023-04-03 ஆந் திகதி பிரதான பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (விரிவாக்கலும் அபிவிருத்தியும்) ஆகிய 02 பதவிகளுக்காக வெளிவாரியாகவும் உள்வாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | வேண்டும் |